பக்கங்கள் 4 ★ விலை சதம் 40

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், நிக்கோ பீடா வகைகளுக்கும்

நிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

ஈழநாடு

The EELA NADU


ஆரோக்கியமான வாழ்விற்கு

மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்

வாங்கி உபயோகியுங்கள் கைக்கடக்கமான 50 சதம் அரைக்கட்டியும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு.

மலர்: 19 யாழ்ப்பாணம் ஆவணி 12 றமழான் 12 ஞாயிற்றுக்கிழமை (28—8—77) இதழ்: 197



( 1-வது படம் ) அனுராதபுரத்தில் தாக்குதலுக்குள்ளாகி படுகாயங்களுடன் வந்த அகதி ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றார். ( 2-வது படம் ) எரிந்து சாம்பலான பின்னர் வெறுமையாகக் காட்சிதரும் பழைய மார்க்கட் கட்டடப், ( 3-வது படம் ) தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் நவீன சந்தையின் ஒரு கடையை, இராணுவத்தினர் அணைத்துக்கொண்டிருக்கின்றனர், ( 4-வது படம் ) யாழ்ப்பாணத்தில் தலைதூக்கிய அசம்பாவிதங்களைப் பார்வையிட யாழ். நகர் வந்த இராணுவத் தளபதி சேபால ஆட்டிகல, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரான்லி சேனநாயக்கா ஆகியோருடன் யாழ். அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோருடன் காணப்படுகின்றனர். ( படங்கள்: பிரபா போட்டோ தேவா )

# தீ விபத்தில் 25 கடைகள் எரிந்து சாம்பல்!

## வெளியேறும் வர்த்தகரை திரும்பச் செய்ய முயற்சி

### ஊரடங்கு உத்தரவு நீக்கத்துக்கு காரணம்

**சுமார் ஒருவாரத்தின்பின் வழமையான நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த யாழ்ப்பாண நகரம் நேற்று அதிகாலை யாழ். நகரின் மத்தியில் பஸ் நிலையத்தின் அருகேயிருந்த கடைகள் தீவைக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதுடன் மீண்டும் சீர்குலைந்தது. ஒருவாரகாலத்தின் பின் ஒற்றைக்கதவிலிருந்து படிப்படியாகத் திறக்கப்பட்டுவந்த கடைகள் மீண்டும் மூடிக்கொண்டன.**

யாழ்ப்பாணம் பெரியகடைவிலுள்ள பல கடைகள் அச்சத்தினால் அப் பகுதியிலிருந்து வெளியேறத் தொடங்கிய காட்சியையே நேற்றுக்காலையிலிருந்து காணக்கூடியதாக இருந்தது. கடைகளிலிருந்த பொருள்களை மட்டுமல்ல தளபாடங்களையும்கூட சிலர் அப்புறப்படுத்தினர்.

இந்த நிலைமையைச் சமாளித்து வர்த்தகர்கள் தொடர்ந்தும் தமது வியாபாரத்தைச் செய்வதற்கு வழி செய்வதற்கான முயற்சிகளை யாழ். மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம் மேற்கொண்டார். இது சம்பந்தமாக அவர் நேற்றுக்காலை ஒரு மகாநாடு கூட்டி வர்த்தகர்கள் இலரையும் அழைத்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்தே இணைப்பதிகாரி திரு. ராஜசிங்கம் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவை அமுல்செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

தமிழர் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரமும் பிரதமருடன் நேற்றுத் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவை வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது நல்லதல்ல வென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் முன்னரே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அதிகாலையில் மூண்ட தீ!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள 25 கடைகள் நேற்று அதிகாலை எரிந்து தரைமட்டமாகியது.

நேற்று அதிகாலை 2 மணிக்குப் பின்னர் பூபாலசிங்கம் புத்தகக் கடையுடன் சேர்ந்த கடைஒன்று தீப்பற்றிஎரிவதை முதலில் கண்டதாக பஸ் நிலையத்திற்கு எதிரில் வசிக்கும் டாக்டர் எஸ். சேனதிராசா தெரிவித்தார்,

டாக்டர் சேனதிராசா உடனடியாக பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்கு தொலைபேசி மூலம் அறிவித்தார். அதன்பின் யாழ். பொலிஸ் நிலையத்திற்கும், யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திற்கும் தொலைபேசி மூலம் அறிவித்ததாக டாக்டர் சேனதிராசா கூறினார்.

மாநகரசபை விசேஷ கமிஷனர் திரு. கே. சிவஞானம் எடுத்த துரித முயற்சியினால் மாநகர சபை 'பௌசர்' சுமார் 2-30 மணிக்கு வந்துசேர்ந்தது. ஆயுதம் தாங்கிய பொலிசாரும் பஸ்நிலையத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இக்கட்டத்தில் 3 கடைகள் மின்சார நிலைய பக்கமாக எரிந்துகொண்டிருந்தன.

பொலிஸார் காங்கேசன் துறை இராணுவமுகாமுக்கு

(3ம் பக்கம் பார்க்க)

## விற்பனையாளர்களுக்கு

பத்திரிகை அச்சடிக்கும் தாள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதினாலும் சொற்ப அளவிலேயே கையிருப்பில் அச்சடிக்கும் தாள்கள் இருப்பதனாலும் எமது பத்திரிகை விற்பனையாளர்கள் கோருமளவிற்கு மேலதிகமாக பத்திரிகைப் பிரதிகளை விநியோகிக்க முடியாமலிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகி—ஈழநாடு

## கொழும்பில் அமைதி

கொழும்பு சனி

கொழும்பில் இன்று பொதுவாக அமைதி நிலவியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரேயொரு கத்திக்குத்துச் சம்பவம் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நகரில் இனியும் தீவைப்பு நடக்காது

### வர்த்தகருக்கு இணைப்பதிகாரி ராஜசிங்கம் உறுதி மொழி

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ் நகரில் தொடர்ந்தும் தீவைப்பு போன்ற சம்பவங்கள் நிகழாதபடி பார்த்துக் கொள்ளுவதாக இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம் உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள பஸ் நிலையத்துக்கருகிலுள்ள சில கடைகள் நேற்று முன்தினம் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த வேளையில் தீவைக்கப்பட்ட சம்பவத்தையடுத்தே இணைப்பு அதிகாரி இந்த உறுதிமொழியைத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிபர் ஒருவரின் தலைமையில் தீவிர விசாரணை நடைபெற்றுவரும் அதேசமயம், இனி மேற்கொண்டும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான முயற்சியில் இணைப்பதிகாரியும் இதர உயர் பொலிஸ் அதிகாரிகளும் தீவிரமாக ஆலோசனை நடத்தினர்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளையில் இப்படியான சம்பவங்களுக்குப் பொறுப்பாகவுள்ளவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்படியும் தொடர்ந்தும் தம் கடைகளைத்திறந்து வர்த்தகம் நடத்த முடியாமல் இருப்பதாகவும் இணைப்பதிகாரியிடம் வர்த்தகர்கள் பலர் புகார் தெரிவித்தனர்.

நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு.

[4-ம் பக்கம் பார்க்க]

## ஒத்துழைப்பு வேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது. இந்தநிலை நீடிக்க வேண்டும். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் எந்தவித அசம்பாவித சம்பவங்களுக்கும் இடமளிக்க வேண்டாமென்றும் பொலிஸ் உயர் அதிகாரியொருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வரி விளம்பரம்

## தேவை

புதிய வேப்பம்விதை, இலுப் பம்விதை தேவை. தொடர்பு கொள்ளுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். (6902)

லண்டனில் ஆண் தாதிப் பயிற்சிக்கு அனுமதிபெற உதவமுடிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். செலவுகள் கொடுக்கப்படும் பொ.சோதீஸ்வரன் காரைதீவு (கி-மா) (6887)

## இலவசம்

''வேல்களையே வெல்லும் வேல்'' சினைய் மலையின் தொடு முடியில்! இருபதாம் நூற்றாண் டின் வெற்றி மத்திய கிழக்கில் நிர்ணயிக்கப்படுகின்றதா? இலவச விபரங்களுக்கு! த. இ. இன்பநாதன் சரசாலை சாவகச் சேரி. 6811

## வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம்மாறிப் போனால் செங்கமாரி, கல்லீரலைப் பாதிக்கும் இந்நோய் முறி வுற்று முதிர்ந்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பிவராமற்குணப் படுத்துவார். காலவியல், தலையவியல், கபால இடி, சிரங்கு, குட்டம், தொய்வு, குன்மம், மாதவிடாய்கால வயிற்றுவலி, அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தி யர் சிதம்பரப்பிள்ளை இராச ரத்தினம் வங்களாவடி, வேலணை. (6888)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம்பிள்ளை

இளைப்பாறிய தபால் அதிபர் கா. நாகலிங்கம் பிள்ளை 24-8-77 புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும், இராசலக்ஷ்மி வேதாரணியசேயோன் (இளைப்பாறிய பென்சன் மா அதிகாரி), வேலாயுதசேயோன் (சேவையர்), விசாகசேயோன் (மாஜி புகையிரத அதிபர்). தனலக்ஷ்சுமி ஆகியோரின் அருமைத்தந்தையும். சபாரத்தினம் J. P (இளைப்பாறிய நீதிமன்ற அலுவலதிகாரி), குணநாயகம் (இளைப்பாறிய நாஷனல் வங்கி தலைமைச்சிறுப்பர்), ஜெகதீஸ்வரி, சீதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சோதிப் பிள்ளை, கந்தையா, சேதுப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளம்பலம், சபாரத்தினம் (இளைப்பாறிய றயில்வே இலாகா சிறுப்பர்), கணபதிப்பிள்ளை (O. A.), தில்லையம்பலம் ஓவசியர் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். இவரது ஈமச்சடங்குகள் 25-8-77 வியாழன் அன்று அச்சுவேலியில் நடைபெற்றது. நேரில் வருகைதந்தவர்களுக்கும், பல உதவிகள் புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், குடும்பத்தவர்கள் எல்லோரும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். R. சபாரத்தினம், செங்கமலம், அச்சுவேலி 6903

## கேள்வி விளம்பரம்

### நீர்வேலி

### கிராமாட்சி மன்றம்

### நீர்வேலி பொதுச் சந்தை கட்டிட வேலை

மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி பகல் 1-00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 15/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 150/-ம் செலுத்தி செப்டம்பர் மாதம் 19ம் திகதி பிற்பகல் 2-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும் அல்லது கந்தோரில் நேரடியாக கையளித்தல்வேண்டும். பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர்கட்கும் பதிவுத் தபாலில் ஓர் பிரதி அனுப்பப்படல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்கள் எனது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கோ. குமாரவேலு

விசேட ஆணையாளர்
கிராமாட்சி மன்றம்
நீர்வேலி

கிராமாட்சி மன்ற
அலுவலகம்
நீர்வேலி 6904

## முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளனம் வேண்டுகோள்

''சமீப நாட்களாக நாடு முழுவதும் நடைபெறும் விரும்பத்தகாத சம்பவங்கள் இன-மத-மொழி பேதங்களைக் கடந்து நிற்கும் மனிதாபிமான உணர்வுக்கு வெட்கந்தரும் சம்பவங்களாகும் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்மால் இயன்ற உதவியும் ஒத்துழைப்பும் அளித்து அவர்களுக்கு நிவாரணம் வழங்க முயற்சிப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றும் முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளனத்தின் பொலநறுவ கிளையினர் விடுத்துள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

## கல்லெறி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று முன்தினம் மாலை, கொழும்பிலிருந்து யாழ்நகர் வந்த யாழ்தேவி புகையிரதத்திற்கு வியாங்கொடையில் வைத்து கல்வீசப்பட்டதாக தெரிகிறது. 5வயதுச் சிறுமி ஒருவர் பலத்தகாயத்துக்குள்ளாகி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கபபட்டார். (கெ)

## "அரச ஆயுர் வேத ஸ்தாபனங்களில் சித்தவைத்தியத்துக்கும் சட்டப்படி உரிமை வழங்குக"

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசினர் ஆயுர்வேத வைத்திய ஸ்தாபனங்களாகிய, ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஆயுர்வேத வைத்தியசபை, ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், ஆயுர் வேதக் கல்லூரி போன்ற தாபனங்களின் நிர்வாக அமைப்புக்களில் சித்த வைத்தியப்பிரிவுக்குச் சட்டப்படியான பிரதிநிதித்துவத்தை உடனடியாக வழங்குமாறு சுகாதார அமைச்சரை அகில இலங்கைச் சித்த டி. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் க. மருதையினர் கடிதமூலம் கோரியுள்ளார்.

1961ம் ஆண்டின் 31ம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 89ம் பிரமாணத்தின் இரண்டாம் உப பிரிவில் ''ஆயுர்வேதம்'' என்ற பதத்திற்கு 'ஆயுர்வேதம் என்று சொல்லுங்கால் அது ஆயுர்வேதம், சித்தம், யூனானி ஆகிய மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கியதாகப் பொருள் கொள்ளப்படவேண்டும்' என வியாக்கியானம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பிரமாணத்தின்படி அதிகமான ஆயுர்வேத அதிகார சபைகளில் சித்த வைத்தியத்துக்கான பிரதிநிதித்துவ உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், இந்தத் தவறை தற்போதய சுகாதார அமைச்சர் செய்யமாட்டார் என எதிர் பார்ப்பதாகவும் அக் கடிதத்தில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்து விற்பனவில் யாழ்ப்பாண, மன்னார், வவனியா மாவட்டங்களிலுள்ளவைத்தியர்களுக்கு மட்டும் 15 வீத விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டித்தும் அத்தியாவசியப் பொருளான மருந்துகளின் விலை நாடெங்கிலும் சமமாக இருக்கவேண்டும் என்பதோடு 15 வீத விலை அதிகரிப்பை உடனே வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறும் உள்ளூராட்சி மன்றங்களால் வட பகுதியில் நடாத்தப்படும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கான மருந்து விநியோகத்தை மறுபடியும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை மூலம் நடத்தவேண்டும் எனவும் கடிதத்தில் வற்புறுத்தப் பட்டுள்ளது. (அ)

• • •

## இவருடன் தொடர்புகொள்க

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாட்டில் நடைபெற்ற வன்செயல்களினால் பாதிக்கப் பட்டு தமது சொந்த மாவட்ட திணைக்களங்களுக்குச் செல்ல முடியாமல் அவதியுறும் அரச ஊழியர்கள் தமது நிலைபற்றியும் வேதனம் பெறுவது பற்றியும் தகவல்கள் பெறுவதற்கும், அதற்கான விண்ணப் பபபடிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்கும் யாழ். செயலகத்தின் நிர்வாகப் பிரிவு திரு. கிருஷ்ணபிள்ளையிடம் தொடர்புகொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளனர். (இக)

## வர்த்தகர்கள் சாமான்களை ஏற்றிச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலுள்ள கடைகள் எரிந்து தரைமட்டமானதை தொடர்ந்து பெரியகடை பகுதியில் உள்ள மற்றவர்த்தகர்கள், கடையில் உள்ள சாமான்களை தங்கள் வீடுகளுக்கு அப்புறப்படுத்துவதில் நேற்றுஈடுபட்டிருந்தனர்.

லொறிகளிலும், வான்களிலும், கார்களிலும், வண்டில்களிலும், கடைச்சாமான்களை ஏற்றிச்சென்றனர்.

பஸ்நிலையத்திற்கு எதிரில் உள்ள மின்சாரநிலைய வீதியில் உள்ள 5கடைகளில் உள்ள சாமான்கள் யாவும், கடைச் சொந்தக்காரர்கள் ஏற்றிச் சென்றனர்.

நவீன மார்க்கட்டிலுள்ள ஜவுளிக் கடைகளும் மற்றும் பல கடைகளிலுமுள்ள பொருட்களும், ஏற்றிச் செல்லப்பட்டன, கஸ்தூரியார் வீதியிலுள்ள கடைச் சாமான்களை ஏற்றுவதற்கு வர்த்தகர்கள், ஒழுங்கு செய்துள்ளனர்.

தங்கள் கடைகள் ஊரடங்கு சட்டநேரத்தில், பாதுகாப்பாக இருக்குமா என்ற நம்பிக்கையில்லாதபடியாலேயே தங்கள் கடைசாமான்களை, ஏற்றிச் செல்வதாக வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

## சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## கேள்விவிளம்பரம்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

**விபரம்**

(1) 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள்.
(2) சுவீப்பிங் மா.
(3) சுவீப்பிங் சீனி.
(4) கழிவு பொருட்கள்.

கேள்விப்பத்திரங்கள் 2-9-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் காரியாலய வேலை நேரங்களில், வெற்றுச்சாக்குக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-ம், ஏனையவற்றுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 50/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் வைக்கப்படும் உறைகள் அரக்கு முத்திரையிடப்பட்டே ஒப்படைக்கப்படவேண்டும்.

பொது முகாமையாளர்.
28-7-1977. 6900

## அமைதிகாக்க கடவுள் வழிபாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப் பட்டு அகதிகளாக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும், நாட்டில் அன்பும் அமைதியும் ஆட்கொள்ளும்வண்ணம் இன, மத மொழி வேறுபாடுகளைக்கடந்து அமைதி காக்கும் கடவுள் வழிபாட்டை பாடசாலைகள், மக்கள் மன்றங்கள் இறந்த வெளிகளில் ஈழ மக்கள் மறுமலர்ச்சி மன்றம் நடாத்திவருகின்றது. (செ)

## பொலிஸார் பற்றிப் புகார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாடெங்கிலும் நேற்றிரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த சமயம் திடீர் என அகதிகள் முகாம் ஒன்றில் பொலிஸார் தோன்றி அங்கிருந்த அகதிகளுக்கும், தொண்டர்களுக்கும் சிரமம் கொடுத்ததாக யாழ். பொலிஸ் அதிபரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமிலேயே இவர்கள் உட்பிரவேசித்தாக சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் புகார் செய்துள்ளார். (கா)

## கைதவறிய 'சூட்கேஸ்''

யாழ்ப்பாணம், சனி

கொழும்பிலிருந்து அகதிகளாக நேற்று காங்கேசன்துறை முகத்துக்கு கப்பலில் வந்தவர்களில்ஒரு இளம் குடும்பத்தினர், தங்களின் ஒரு 'சூட்கேஸ்' கப்பலிலேயே கைதவறிவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதில் பெறுமதி வாய்ந்த பொருள்கள் இருந்தனவாம்.


வாடிக்கையாளர்களுக்கோர் அறிவித்தல்

18-8-77-ம் திகதிக்கு முன் உள்ள ஓடர் உடுப்புகள் யாவும் முடிவடைந்துவிட்டது. தயவுசெய்து றசீட்டுடன் வந்து உடுப்புகளைப் பெற்றுக்கொள்ளவும். 19-ம் திகதிக்குப் பின்னுள்ள ஓடர் உடுப்புகள் யாவும் 31-8-77-ல் பெற்றுக்கொள்ளலாம்.

றிபைன் டிரஸ் மனுபக்டரி
3, ஜும்மா மொஸ்க் லேன்,
யாழ்ப்பாணம். 6899

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட்,
போன்: 7199.

யாழ்ப்பாணம்.
தந்தி: வைரம்




# சுதந்திர கட்சியின் ஒரு பகுதியினரே நெருக்கடிக்கு காரணம்

## நிதியமைச்சர் சாடுகிறார்

கொழும்பு, சனி

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரே பொறுப்பானவர்கள் என்று நிதி அமைச்சர் திரு. ரொனி. டி.மெல் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அரசாங்க ஊழியர் சேம நல சங்கத்தின் தலைமை நிலைய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட குற்றச்சாட்டினைத் தெரிவித்தார்.

''இந்தக் குற்றச்சாட்டினை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருக்கு நேராகவே சொல்லுகிறேன் யாழ்ப்பாணச் சம்பவம் ஒரு வகுப்புவாதக் கலவரமல்ல அதனை வகுப்புக் கலவரமாக இவர்கள்தான் பொறுப்பாக இருந்தார்கள் என்று நம்புவதற்கு போதிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன'' என்றார் அமைச்சர்.

''மக்களின் சடலங்களின் மீது பதவிக்கு வந்துவிடலாம் என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அரசாங்கத்துடன் தவறாக விளையாடுகிறார்கள்'' என்று அமைச்சர் மேலும் கூறினார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் தோல்விகண்ட அரசியல் சக்திகளின் வதந்திகளுக்கு செவி மடுக்க வேண்டாம் என்றும், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் கூடியவிரைவில் ஏற்படுத்துவதற்கான சகல வழிகளிலும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படியும் அரசாங்க ஊழியர்கள் சகலரையும் அவர் கேட்டுக்கொண்டார்.

---

அகதியாக வந்தவரின்

# சிசு மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அநுராதபுரத்தில் தாக்குதலுக்குள்ளாகி வீடிழந்து அகதிகளாகி யாழ்ப்பாணம் வந்தடைந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 35 நாள் சிசு ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மரணமானது.

காளிமுத்து ஜெயராணி என்ற சிசுவின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரணவிசாரணையில் கீழ்க்காணும் விபரங்கள் தெரியவந்தது. அநுராதபுரத்தில் நீண்டகாலமாக காளிமுத்து குடும்பத்துடன் வசித்துவந்தார். தேர்தல் தினத்தன்று பிறந்த இக் குழந்தைக்கு 'ஜெயராணி' எனப் பெயரிட்டனர்.

கலவர தினத்தன்று காளிமுத்துவின் மனைவி தனலட்சுமி குழந்தையை அணைத்து படுத்துக்கொண்டிருந்த சமயம் திடீரென்று வீடுபற்றி எரிந்தது. காளிமுத்துவும் குடும்பத்தினரும் பலமாகத் தாக்கப்பட்டவர். தனலட்சுமிக்கு காலில் பலத்தஅடி ஏற்பட்டது.

காளிமுத்துவும் குடும்பத்தினரும் இரவில் ஓடித்தப்பி அகதிகளாக கிளிநொச்சி வந்தடைந்தனர். அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலுள்ள அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தனர்.

காலில்பலத்த காயமடைந்த தனலட்சுமி கைக்குழந்தை ஜெயராணியுடன் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தார். அங்குதாயுடனிருந்த ஜெயராணி மரணமானார்.

பிரேத பரிசோதனைக்குத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி விசாரணையை ஒத்திவைத்தார். (சு)

---

# இளைஞர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஞாயிறு

இனந்தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இளவாலையைச் சேர்ந்த இமானுவல் (வயது 23) என்ற இளைஞனே மேற்படி துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினமிரவு 7-15க்கு இனந்தெரியாத சிலர் காரொன்றில் வந்து இவரை அழைத்ததாகவும் இவர் வெளியே வந்தசமயம் இவரை நோக்கிச்சுட்டதாகவும் தெரியவருகிறது. துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இவர் ஸ்தலத்திலேயே மரணமானார் இக் கொலைதொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இக்கொலைக்குப்பயன்படுத்தப்பட்டதாகச்சொல்லப்படும் கார் ஒன்றைச் சங்கானைப் பொலிசார் காங்கேசன் துறையில் வைத்துக்கைப்பற்றியுள்ளனர்.

இக்கொலை தொடர்பான புலன் விசாரணையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. இராசையாவும் சார்ஜண்ட் சரவணமுத்துவும் ஈடுபட்டுள்ளனர். [கா]

---

# யாழ். லயன்ஸ் உதவ முன்வருகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நகரில் தீக்கிரையான கடைகளின் சொந்தக்காரர்களுக்கு உதவ யாழ். லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் கடன் உதவியைவழங்க லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

பஜாரிலும், பஸ் நிலையத்திலும் தீக்கிரையாக்கப்பட்ட கடைகளின் சொந்தக்காரர்கள் டாக்டர் எஸ். சபாரத்தினத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முழுவிபரங்களுக்கு டாக்டர் எஸ். சபாரத்தினம், இல. 2 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம். (கெ)

---

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை. சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சங்காபிஷேகமும் மணவாலக்கோல உற்சவமும் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறும். காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை திருமுறைப்பாராயணம் பஜனையும் இரவு விநாயகப்பெருமான் பூந்தண்டிகையில் வெளிவீதி வலமும் வருவார். (கெ)

---

மீன்பிடிக்கச் சென்ற

# நால்வரில் இருவர் மரணம்; மற்றவர்களைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாச்சிக்குடாவிற்கு மீன்பிடிக்க வள்ளத்தில சென்ற நால்வரில் இருவரின் சடலங்கள் அரியாலை கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் இருவரைக் காணவில்லை.

நவாலியைச் சேர்ந்த சுமரேசு செல்லத்துரை, வேலுப்பிள்ளை நாகரத்தினம் ஆகியோரின் மரணவிசாரணையில் மேற்கண்டதகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்த இருவரும் நாச்சிக்குடாவிற்குமீன்பிடிக்கச்சென்றதாகவும், அங்கிருந்து 21-ம் தேதி மு.நடராசா, சிவம் ஆகியோருடன் வள்ளத்தில் திரும்பியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்கள் நவாலி முருகமூர்த்தி கோவிலுக்கு செல்லவேண்டியிருந்ததால், உறவினர்கள் ஒருவரை நாச்சிக்குடாவிற்கு அனுப்பியபோது, 24ம் தேதியே அவர்கள் வள்ளத்தில் புறப்பட்டுவிட்டார்கள் என்ற தகவல் கிடைத்ததாகவும் கூறப்பட்டது.

உறவினர்கள் பல இடங்களில் தேடுதல் நடத்தியபோது இருவரின் சடலங்கள் அரியாலை கடற்கரையில் ஒதுங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் இருவர்களையும், உறவினர் தேடுகின்றனர்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி, மரணவிசாரணையை ஒத்திவைத்தார். (க)

---

## நாகதீப விகாராதிபதி அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நயினாதீவு நாகதீப விகாரை பற்றிச் சிங்களப்பகுதிகளில் பரப்பப்பட்ட வதந்திகளை மேற்படி விகாரையின் தலைமைக்குரு வண. பண்டித பிரகாமணவத்த ஸ்ரீதர்மகீர்த்தி திஸா மகாநாயக்க தேரோ மறுத்துள்ளார்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் நயினாதீவு விகாரையில் வசித்துவருகின்றேன். இந்தக்காலங்களில் அப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிப்பழகி வந்துள்ளேன். எவராவது என்னைப் புண்படுத்தத்தக்கதாக நடந்துகொண்டது கிடையாது. நாம் அனைவரும் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வோமாக என்று அறிக்கையொன்றில் மேற்படி நயினை நாகவிகாரை பிரதம குரு தெரிவித்துள்ளார். (கா)

---

# நிதி 'திரட்டுவதில் மதஸ்தாபனங்கள் முயற்சி

யாழ்ப்பாணம் ஞாயிறு

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் சகோதரர்களுக்கு நல்வாழ்வளிக்கும் முயற்சியில் ''பாதிக்கப்பட்ட தமிழர் புனருத்தாரண சபை'' நிதி திரட்டும் பணிக்குப் பொறுப்பாக வடபகுதியிலுள்ள சகல இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மத ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

யாழ்ப்பாணம் ஆயர் வண. எஸ். தியோகுப்பிள்ளை, வண. பிஷப் டி. ஜே. அம்பலவாணர் (பிஷப் இல்லம் வட்டுக்கோட்டை), வண. எம். ஏ. இரத்தினராசா (றிம்மர் மண்டபம் யாழ்ப்பாணம்) வண. ஜே. ஜே. ஞானப்பிரகாசம் (பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) இந்து ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பாக க. கனகராசா (மில்க்வைற் யாழ்ப்பாணம்) ஆகியோர் தத்தமது ஸ்தாபனங்களின் மூலமாக இப்பணியை உடனடியாக ஆரம்பித்துள்ளனர்.

சகல கிராமங்களிலும் இதற்கான பொறுப்பை ஏற்றுள்ளவர்களிடம் ஒப்படைக்கப்படும் பணத்துக்குரிய பற்றுச்சீட்டை உடன் பெற்றுக்கொள்ளுமாறு பொது மக்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

நேரடியாக பெருந்தொகைப் பணத்தை அளிக்க விரும்புவோர் சபையின் பொருளாளர்களான திரு. லங்காநேசையா, வர்த்தக வங்கி (659, நாவலர் வீதி, யாழப்பாணம்) அல்லது திரு. ஆர் ரி. குணரத்தினம் (சீமாஸ் ஸ்தாபனம், திருநெல்வேலி, யாழ்பாணம்) ஆகியோருக்கு அனுப்பிவைக்கலாம்.

காசோலைகள் ''பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு சபை'' என்று குறிப்பிடும்படி வேண்டப்படுகின்னர்.

மேலும் இவ்விடயங்களை விபரமாக விளக்கி, இதன் தலைவர் ஜே. ஜி. அரசரெத்தினம் துண்டுப்பிரசுரமென்றையும் வெளியிட்டுள்ளார்

அவ்வப்போது பாதிக்கப்பட்டோருடைய தற்காலிக, நிரந்தர புனர்வாழ்வுக்கான கடமைகளை அரசாங்கத்துடனும் தேவையேற்படும்போது வெளிநாட்டு சமூகசேவை ஸ்தாபனங்களுடனும் சபை தொடர்ப்பு கொண்டு ஆவன செய்யத் தீர்மானித்துள்ளது.

---

# தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்க!

## எஸ். பி மகேஸ்வரன் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று அதிகாலை யாழ். பஸ் நிலையத்துக்கு அருகாமையில் ஏற்பட்ட தீ வைப்புச் சம்பவம் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ்.மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் யாழ். பஸ் நிலையத்தின் கிழக்குப் புறமாக இருந்த கடைகள் அனைத்துமே எரிந்து சாம்பராயின. இருபத்தைந்து கடைகள் எரிந்துள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. மகேஸ்வரன் தெரிவித்தார்.

அதிகாலை 1 45 மணியளவில் இக்கடைகள் எரியத் தொடங்கியதாகவும், தமக்கு தொலைபேசி மூலம் கிடைத்த தகவலைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் அதிபர் திஸநாயக்கா, மற்றும் சில கான்ஸ்டபிள்களுடன் தாம் 2-15 மணியளவில் ஸ்தலத்துக்கு விரைந்து தீயணைப்பு முயற்சியில் ஈடுபட்டதாகவும் திரு. மகேஸ்வரன் தெரிவித்தார்.

தெற்குப் புறத்திலிருந்தே தீ பரவிக்கொண்டிருந்ததாகவும் வடக்குப் புறத்திலிருந்த கடைகளை அகற்றித் தீ மேலும் பரவாமல் தாம் தடுத்ததாகவும் இல்லாவிடின் இன்னும் பல இடங்களுக்கு தீ பரவிப் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் தாம் அங்கு நின்று தீயணைப்பில் ஈடுபட்டிருந்ததாகவும் தம்முடன் இராணுவமும் தீயணைப்பில் ஈடுபட்டதாகவும் திரு. மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு பொலிஸ் தலைமை நிலையத்தில் கடமையாற்றிய திரு. மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து இப்போது இங்கு கடமையாற்றுகிறார்.

யாழ்ப்பாணம் 'கிங்ஸ்கவுஸி'லுள்ள பொலிஸ் அதிபர் கந்தோருடன் தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (ம)

---

## அதிகாலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகொண்டதைத் தொடர்ந்து தீ அணைக்கும் படையினர் 3-20 மணியளவில் வந்துசேர்ந்தனர் அச்சமயம் இராணுவத்தினரும் வந்துசேர்ந்தனர்.

இராணுவ அதிகாரி திரு. லியனகே தலைமையில் இராணுவத்தினர் தீயை அணைப்பதில் சுறுசுறுப்பாக இயங்கினர்.

இராணுவத்தினர் வந்து சேரும் நேரம் தீ 10 கடைகள் வரை பரவியிருந்தது.

ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதிக்கு தீ பரவாமல் தடுப்பதற்கு இடையிலிருந்த ஒரு சிறு சிகை அலங்கார நிலையம் உடைக்கப்பட்டதால் தீ அப்பால் பரவாமல் தடுக்கப்பட்டது.

இராணுவத்தினரும் பொலிசாரும் பெரு முயற்சி எடுத்ததால் பெரியாஸ்பத்திரிக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

25 கடைகளும் எரிந்து தரைமட்டமாகியது நேற்றுக்காலை 10 மணிவரை இக்கடைகள் எரிந்துகொண்டிருந்தன.

கடைகள் தீப்பிடித்ததற்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (க)

---

## கவிஞரின் வீட்டில் சோதனை!

மட்டக்களப்பு, சனி

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வீட்டை இன்று இராணுவத்தினர் சோதனையிட்டதாகவும் அங்குள்ள பொருள்கள் சிலவற்றை அவர்கள் சேதப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. இச் சமயத்தில் கவிஞர் மட்டக்களப்பில் இருக்கவில்லை.

---

டெஸ்ட் கிரிக்கெட்

## இங்:214 ஆஸி:1-11

லண்டன், ஆக. 27

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே ஓவல் மைதானத்தில் நடைபெற்றுவரும் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட்டில் 3-வது நாளான இன்று ஆஸ்திரேயா (ஆட்டநேர இறுதிவரை) தனது முதல் இன்னிங்ஸில் 1 விக்கட்டை இழந்து 11 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 214 ஓட்டங்கள் எடுத்தது.

### கூட்டணி எம். பி. க்கள் கோரிக்கை மீது

# உயர் அதிகாரிகள் குழு இன்று

# யாழ். விஜயம்!

## பிரதமர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

**இராணுவத்தளபதி சேபாலஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜயசிங்கா, பிரதமரின் செயலாளர் திரு. மெனிக் திவலே ஆகியோர் இன்று பகல் விமானப்படை விமானமொன்றில் யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர்களுடன் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் கூடவருகின்றார்.**

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடைபெற்றுவந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக கூட்டணிச் செயலதிபர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் பிரதமருடன் தொடர்புகொண்டதைத் தொடர்ந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ள இவர்கள் இங்கு வருகின்றனர்.

தொடர்ந்து நிகழ்ந்துவந்த அசம்பாவிதங்களுடன் நேற்று யாழ். நகரில் 25 கடைகள் தீக்கிரையான சம்பவம் பற்றி கொழும்பில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுக் காலை சந்தித்து யாழ். நிலைமைகள் பற்றி விளக்கமாகக் கூறினார்.

பாதுகாப்புப் படையினர், குறிப்பாக பொலிசார் மற்றும் இராணுவ நடமாட்டம் குறித்து பொதுமக்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்றும் ஊரடங்குச்சட்டம் அவசியமில்லை என்றும் திரு. வி. என். நவரத்தினம் பிரதமரிடம் வற்புறுத்திக் கூறியதாகத் தெரியவருகிறது.

இராணுவத் தளபதியும் மற்றவர்களும் இன்று யாழ்ப்பாணம் வரமுன்னர் திருக்கோணமலைக்கு விஜயம்செய்து அங்குள்ள நிலைமைகளை அறிவார்கள். அங்கு தோன்றியுள்ள பிரச்னைகளைத் தீர்த்துவைக்க



என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்பது பற்றி முடிவுசெய்வார்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர்களும் கூட்டணி எம். பி.க்களும் நேற்று மேற்கொண்ட தீவிர முயற்சிகளைத் தொடர்ந்தே பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அசம்பாவிதங்கள், வன்செயல்கள் தலைதூக்கியுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு பிரச்னைகள் இருப்பதால் எல்லாப் பிரச்னைகளையும் பொதுவானதொரு நோக்கோடு கவனிக்காது ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய பிரச்னையையும் தனித்தனியாக கவனிக்குமாறும் திரு. வி. என். நவரத்தினம் கோரியிருந்தார்.

இன்று பகல் வரும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து, சில பிரச்னைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கக்கூடிய முடிவுகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் நிரந்தரஅமைதி ஏற்படவும் பதட்ட நிலைகுறைந்து வழக்கமான நிலை உருவாகவும் இன்றைய 'முடிவுகள்' வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

### நகரில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். சிவசிதம்பரம், ஊர்காவற்றுறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு கே. பி. இரத்தினம், யாழ்ப்பாண தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியவர்களும் இச்சம்பவம் தொடர்பாக இணைப்பு அதிகாரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் இம்மாதிரிச் சம்பவங்கள் நிகழ்வதால் ஊரடங்குச் சட்டத்தை யாழ். மாவட்டத்தில் நீக்கிவிடும்படி இவர்கள் கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது.

#### பாதுகாப்புக்கு மாற்றுவழி

நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மாற்று வழி ஒன்றை நடைமுறைப்படுத்தப்போவதாக இணைப்பு அதிகாரி, தம்மைச் சந்தித்த தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கும் வர்த்தகப் பிரமுகர்களுக்கும் உறுதியளித்திருப்பதுடன், வர்த்தகர்கள் தம் கடைகளை அப்புறப்படுத்தாமல் அச்சமின்றி வியாபார ஸ்தலங்களை நடத்த ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். யாழ். நகரில் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் இனிமேல் பாதுகாப்பு சேவையைச் சேர்ந்த காவலர்கள் நகரில் ரோந்துபுரிவார்கள் என்றும், இவர்களுடன் தமிழ் தெரிந்த பொலிசாரும் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கூடியவரையில் பொலிசாரும், ராணுவமும் நகருக்குள் காவல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், எரிக்கப்பட்ட 25 கடைகளையும் மீண்டும் விரைவாக சீர்செய்துகொடுக்கும்படி யாழ். விசேட ஆணையாளர் திரு. சிவஞானத்தை இணைப்பு அதிகாரி கோரியிருக்கிறார். எரிக்கப்பட்ட ஏனைய கடைகளையும் விரைவில் மீண்டும் சீர்செய்து கொடுக்கும்படியும் விசேஷ ஆணையாளரை அவர்கோரியுள்ளார்.

## தீ விபத்து விசாரணைக்கு

### பொலிஸ் குழு நியமனம்

பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள கடைகள் எரிவதாகத் தகவல் கிடைத்தவுடன் உதவிப்பொலிஸ் அதிபர் திரு. திஸாநாக்கா பத்துப் பொலிஸ் சிப்பாய்களுடன் ஸ்தலத்திற்கு விரைந்தார். அதன்பின். இணைப்பதிகாரி திரு ருத்திரா ராஜசிங்கம், பொலீஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோரும் ஸ்தலத்திற்கு விரைந்தனர். இணைப்பதிகாரியின் ஏற்பாட்டின்மீது இராணுவ பவுசர் ஸ்தலத்திற்கு கொண்டுவரப்பட்டு தீ உடனடியாக அணைக்கப்பட்டதுடன் ஆஸ்பத்திரிக்கும் மின்சாரநிலையத்திற்கும் பரவாமல் தடுக்கப்பட்டது.

இத்தீவிபத்துத் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இணைப்பதிகாரி திரு ருத்திரா ராஜசிங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளார். பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். மகேஸ்வரன் தலைமையிலான இந்தக் குழுவில் இன்ஸ்பெக்டர் தாமோதரம், சார்ஜன்ட் ரெட்றிக்கோ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## சஞ்சய்காந்தி, சுக்லா

## நீதிமன்றத்தில் ஆஜர்!

**புதுடில்லி, ஆக. 26**

**முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் மகன் சஞ்சய் காந்தியும், முன்னாள் தகவல் தொடர்புகள் அமைச்சர் திரு. சுக்லாவும் இன்று புதுடில்லி நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.**

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் சம்பந்தமான திரைப்படம் ஒன்றைத் நாசப்படுத்தியதாக இவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டு சம்பந்தமாக திரு. சஞ்சய் காந்தியும் திரு. சுக்லாவும் இதுவரை நீதிமன்றத்திற்கு ஏன் ஆஜராகவில்லை என்பதற்கு இவர்களின் வழக்கறிஞர் இன்று நீதிபதியிடம் காரணம் கூறுகையில் நேரில் சமூகமளித்தால் இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதனாலேயே நீதிமன்றத்திற்குச் சமூகமளிப்பதை தவிர்த்துக்கொண்டு வந்தனர் என்று தெரிவித்தார்.

இன்றுதான் இவர்கள் இருவரும் மேற்படி குற்றச்சாட்டு சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

ஒரு வழக்குச் சம்பந்தமாக திரு. சஞ்சய்காந்தி நீதிமன்றத்தில் ஆஜராவது இதுதான் முதற்தடவையென்று இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவரும் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நீதிமன்றத்தில் பெரும் திரளான மக்கள் குழுமியிருந்தனர்.


### அறிவித்தல்

**சீமெந்து விநியோகம்**

ஆகஸ்ட் 17-ம் திகதியிலிருந்து சீமெந்து விநியோகப் பத்திரம் உடையவர்கள் செப்ரெம்பர் 1-ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தொழிற்சாலை, மூகாமையாளர்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1977-08-27. 6905



சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு





இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 13-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.